பக்கங்கள்: 07

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 13 புதன்கிழமை 30.12.2020 கதிர் 286

உக்ரைனிலிருந்து இலங்கை வந்த

## சுற்றுலாப் பயணிகளில் மூவருக்குக் கொரோனா

இலங்கைக்கு சுற்றுலா வந்த உக்ரைன் பிரஜைகளில் மூவருக்குக் கொரானா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் மூவருக்கும் நேற்றிரவு தொற்று உறுதிசெய்யப்பட்டது என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம்

2

தன்னிச்சையான, ஜனநாயக விரோத, சட்டவிரோதமான

# மாவையின் செயற்பாட்டினால்தான் யாழ். மாநகர சபையை இழந்தோம்



## சுமந்திரன் காட்டமான கடிதம்



யாழ்ப்பாணம்,டிசெம்பர் 29

“உங்களுடைய தன்னிச்சையான, ஜனநாயக விரோத, சட்டவிரோத செயற்பாட்டினால் போட்டியின்றி வென்றிருக்க வேண்டிய யாழ் மாநகர சபை முதல்வர் பதவியை நாம் இழந்திருக்கின்றோம்.

“தமிழ்த்தேசிய அரசியல் களத்தில் மிக முக்கிய அடையாளமான யாழ் மாநகர சபை தலைமையை எமது கட்சி இழந்தமைக்கு மேற்சொல்லப்பட்ட தங்களது நடவடிக்கைகளே காரணமாகும் என்பதையும், இதனால் ஏற்படும் கட்சியின் பின்னடைவுக்கும் தாங்களே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பதையும் இத்தால் பதிவு செய்கின்றேன்.”

- இவ்வாறு காட்டமாகத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின்

2

# யாழ். மாநகர சபையின் புதிய மேயரானார் மணி

## மண்கவ்வினார் ஆனோல்ட்



**(எஸ்.நிதர்ஷன்)**

**யாழ்ப்பாணம்மாநகரசபையின் புதிய மேயராகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவு செய்யப் பட்டுள்ளார்.**

**புதிய மேயரைத் தெரிவு செய்வதற்காக இன்று நடத்தப்பட்ட பகிரங்க வாக்கெடுப்பில் மணிவண்ணன் 21 வாக்குகளையும், முன்னாள் மேயர் இம்மானுவேல் ஆனோல்ட் 20 வாக்குகளையும் பெற்றனர்.**

2

# நல்லூர் பிரதேச சபையையும் இழந்தது தமிழ்க் கூட்டமைப்பு

## முன்னணியின் மயூரன் தவிசாளராகத் தெரிவு



(எஸ்.நிதர்ஷன்)

நல்லூர் பிரதேச சபையின் புதிய தவிசாளராக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர் பத்மநாதன் மயூரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குள் இருந்த நல்லூர்

2

# ‘மொட்டு’ கட்சியின் உறுப்பினர்கள் சிலர் சஜித் அணியுடன் இணைவு!

ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணியின் உறுப்பினர்கள் சிலர் விரைவில் தமது அணியுடன் இணையவுள்ளனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய மக்கள் சக்தியானது பாரிய அரசியல் கூட்டணியாகச் செயற்படவுள்ளது. எமது கூட்டணியில் கட்சிகள், அமைப்புகள் இணையலாம்.

7

# புதிய அரசமைப்பு வரும் வரைக்கும் மாகாண சபைத் தேர்தல் வேண்டாம்

## இராஜங்க அமைச்சர் நாலக கொடஹேவா வலியுறுத்து



புதிய அரசமைப்பு இயற்றப்படும்வரை மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தாமல் இருப்பதே சிறந்த முடிவாக அமையும்.

- இவ்வாறு இராஜங்க அமைச்சர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஆட்சியின்போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் தேர்தல்கள் பிற்போடப்பட்டன. இதற்கு எதிராக எமது அணியினர்

2

## இலங்கையில் மிகவும் வயது முதிர்ந்த ‘வேலு பாப்பானி அம்மா’ காலமானார்!



இலங்கையில் மிகவும் வயது முதிர்ந்த பெண், நாகொட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

2

# வடக்கு - கிழக்கு தனிப்பிராந்திய யோசனையைத் தூக்கி வீசுங்கள்

## கூட்டமைப்பின் யோசனைக்கு எதிராக சரத் வீரசேகர போர்க்கொடி

இலங்கையில் தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பான விடுதலைப்புலிகளின் தமிழீழக் கனவுடன் தொடர்ந்து செயற்பட்டுவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர்கள் குழுவுக்குச் சமர்ப்பித்துள்ள யோசனைகளில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்த தனிப்பிராந்தியமாக இருக்க வேண்டும் என்ற யோசனையை அரசு தூக்கிக் குப்பையில் வீச வேண்டும்.

- இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் உள்ளூராட்சி சபைகள்

2

# டக்ளஸைக் கட்டிப்பிடித்துக்கொண்டு இருக்கும் 10 பேரும் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள்!

## முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் கூறுகின்றார்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியிலிருந்து இருந்து நீக்கப்பட்ட வி.மணிவண்ணன் மேயராகப் தெரிவாக ஆதரவு வழங்கி கட்சியின் கொள்கைக்குத் துரோகம் செய்த யாழ்ப்பாணம் மாநகர சபையின் 10 உறுப்பினர்களும் கட்சியில் இருந்து நீக்கப்படுவார்கள்.

7

# சுகாதார நடைமுறையை மீறிய 50 பஸ்களின் அனுமதி இரத்து!

சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்காத 50 பஸ்களின் வீதிப் போக்குவரத்து அனுமதிப் பத்திரங்கள் தற்காலிகமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளன என்று போக்குவரத்துத்துறை இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

7

## மாவையின் செயற்பாட்டினால்தான் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் மாவை சேனாதிராசாவுக்கு அனுப்பி வைத்திருக்கின்றார் கட்சியின் பிரதிப்பொதுச்செயலாளரும்யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன்.

இன்று காலை யாழ். மாநகரசபை மேயர் தெரிவு நடந்த கையோடு இந்தக் கடிதத்தை அவர் அனுப்பி வைத்திருக்கின்றார். அந்தக் கடிதத்தின் முழு விவரம். வருமாறு:-

திரு. மாவை சேனாதிராசா
தலைவர்
இலங்கை தமிழ் அரசுக் கட்சி
30, மார்டின் வீதி
யாழ்ப்பாணம்

ஐயா,

யாழ்ப்பாண மாநகர சபை

இன்று யாழ் மாநகர சபை மேயர் தேர்வில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தோல்வியடைந்துள்ளது.

வரவு - செலவு திட்ட முன்மொழிவில் இரண்டு தடவைகள் தோல்வியுற்ற காரணத்தால் எமது மேயர் பதவி இழந்ததை அடுத்து நடந்த நிகழ்வுகளை இங்கே வரிசைப்படுத்த விரும்புகிறேன்:-

19/12/20 அன்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயாவின் இல்லத்தில் சந்தித்ததை அடுத்து, வீட்டுவாசலில் வைத்து யாழ்மாநகர சபைக்கு புதிய மேயர் வேட்பாளராக வேறொருவரை நியமிப்பதே உசிதம் என்றும் அதற்குப் பொருத்தமானவர் முன்னால் நாடாளுமன்ற உறுப்பினர் திரு. சொலமன் சிறில் என்பது என்னுடைய கருத்து என்பதையும் கூறினேன்.

21/12/20 அன்று நீங்கள் எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்து, நான் சொன்ன கருத்தோடு நீங்கள் உடன்படுவதாகவும் இது சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர் திரு. சிவஞானம் சிறிதரனின் கருத்தும் திரு. சொலமன் சிறில் என்பதே என்றும் சொன்னீர்கள். நீங்கள் யாழ்ப்பாணம் செல்வதாகவும் அங்கே உறுப்பினர்களோடு நடாத்தும் கூட்டத்திற்கு என்னை வரமுடியுமா என்றும் கேட்டீர்கள். கட்சியின் சார்பில் அரசமைப்பு யோசனைகள் நிறைவு செய்யும் வரை என்னால் வரமுடியாது என்றும் திருசொலமன் சிறில் வேட்பாளராக வருவதில் எனக்கு உடன்பாடு உள்ளது என்றும் கூறினேன். எப்படியாயினும் இறுதிமுடிவு எடுப்பதற்கு முன்பதாக என்னோடு திரும்பவும் பேசுவதாக கூறியிருந்தீர்கள்.

எட்டு நாட்களுக்குப்பிறகு நேற்றைய தினம் 29/12/2020 காலையில் நீங்கள் எனக்குத. தொலைபேசி அழைப்பெடுத்து மாநகரசபை உறுப்பினர்களில் அநேக மானவர்கள் திரு ஆர்னோல்டையே திரும்பவும் வேட்பாளராக நிறுத்தவேண்டும் என்று விரும்புவதாகவும், இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக காலை 10.30 மணிக்கு கூட்டம் ஒன்று நடத்தப்போவதாகவும் சொன்னீர்கள்.

நான் கொழும்பில் இருந்து பிரயாணமாகிவந்துகொண்டிருக்கின்றேன் என்றும் மதியம் 1 மணிக்குப் பின்னரே யாழ்ப்பாணத்திற்கு வந்தடைவேன் என்றும் அதற்குப் பின்னர் கூட்டத்தை நடாத்தினால் நான் கலந்து கொள்வேன் என்றும் உங்களுக்கு நான் அறியத்தந்தேன்.

அதே தொலைபேசி உரையாடலில், புதிய மேயர் வேட்பாளர் சம்பந்தமாக எனது நிலைப்பாட்டைத் தெளிவாக திரும்பவும் கூறினேன்:-

வரவு - செலவுத் திட்டம் தோல்வியுற்றால் இராஜினாமா செய்ய வேண்டியது ஒரு ஜனநாயக விழுமியம் மட்டும்அல்ல, அது ஒரு ஜனநாயக மரபாகவும் இருந்திருக்கின்றது. இந்த மரபு பின்பற்றப்படாத காரணத்தால்தான் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டு இராஜினாமாச் செய்தவராக கருத வேண்டும் என்று அது ஒருசட்டத்தின் தேவைப்பாடாகவும் ஏற்படுத்தப்பட்டது.

சட்டத்தின்செயற்பாட்டினால்இராஜினாமா செய்தவர் ஆனவர் மீண்டும் அப்பதவிக்குப்போட்டியிடுவது சட்டத்திற்கு முரணானது மட்டும் அல்லாமல் ஜனநாயக விழுமியங்களையும் மீறுகின்ற செயலாகும்.

ஆகையால் இராஜினாமா செய்தவரான ஆர்னோல்டைத்தவிர வேறொருவரைத்தான் எமது வேட்பாளராகதெரிவு செய்ய வேண்டும் என்பதை திட்டவட்டமாக சொன்னேன்.

வரவு - செலவுத்திட்டத்தின் தோல்வியின் காரணமாக இராஜினாமா செய்தவர்களை மீளவும் வேட்பாளர்களாக நிறுத்தினால் தமது கட்சி அதை எதிர்க்கும் என்றும், அப்படி அல்லாது வேறு எவரையேனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிறுத்தினால், தாம் ஆதரவு கொடுப்போம் என்றும் சில நாள்களுக்கு முன்னர் தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனித. தலைவர் திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பகிரங்கமாக அறிவித்திருந்தார். இவ் அறிவிப்பு எமது கட்சி வேட்பாளரை வேறு கட்சியினர் தெரிவு செய்யும் செயற்பாடு அல்ல. நான் மேற்சொன்ன ஜனநாயக விழுமியத்தின் அடிப்படையிலான அறிவிப்பே அது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரினதும் கருத்துக்கு மாறாகவும், நீங்கள் எனக்குச் சொன்ன தங்களது சொந்தக. கருத்துக்கே மாறாகவும், தன்னிச்சையாக நேற்று காலை 10.30 மணிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட யாழ் மாநகர சபை மேயர்பதவிக்கு, ஏற்கனவே இராஜனாமா செய்தவரான திரு ஆர்னோல்டையே வேட்பாளராக அறிவித்திருந்தீர்கள்.

உங்களுடைய மேற்சொன்ன, தன்னிச்சையான, ஜனநாயக விரோத, சட்டவிரோத செயற்பாட்டினால் போட்டியின்றி வென்றிருக்க வேண்டிய யாழ் மாநகர சபை முதல்வர் பதவியை நாம் இழந்திருக்கின்றோம்.

தமிழ்த்தேசிய அரசியல் களத்தில் மிக முக்கிய அடையாளமான யாழ்மாநகர சபை தலைமையை எமது கட்சி இழந்தமைக்கு மேற்சொல்லப்பட்ட தங்களது நடவடிக்கைகளே காரணமாகும் என்பதையும், இதனால் ஏற்படும் கட்சியின் பின்னடைவுக்கும் தாங்களே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பதையும் இத்தால் பதிவு செய்கின்றேன்.

இப்படிக்கு,
எம்.ஏ.சுமந்திரன்
பா. உ. யாழ் மாவட்டம்
பிரதி பொதுச்செயலாளர்
இலங்கை தமிழ் அரசுக் கட்சி

-என்று உள்ளது.

## சுற்றுலாப் பயணிகளில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள சுற்றுலாப் பயணிகளை மருத்துவ சிகிச்சைகளுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

உக்ரைனிலிருந்து 180 சுற்றுலாப் பயணிகளை ஏற்றி வந்த விமானம் மத்தளை சர்வதேச விமான நிலையத்தில் நேற்றுமுன்தினம் தரையிறங்கியது. இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்து வரும் செயற்றிட்டத்தின் கீழ் இவர்கள் வரவழைக்கப்பட்டனர். நாட்டை வந்தடைந்துள்ள சுற்றுலாப் பயணிகள் பெந்தோட்டை மற்றும் கொக்கல பகுதிகளிலுள்ள ஹோட்டல்களுக்கு அழைத்து செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சுற்றுலாப் பயணிகளில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி ஒரு வாக்கு வித்தியாசத்தில் மணிவண்ணன் மேயராகத் தெரிவாகியுள்ளார்.

மாநகரசபையின்மேயர்தெரிவுக்கான விசேட அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் இன்று காலை 9.30 மணியளவில் ஆரம்பமானது.

இதன்போது மேயர் வேட்பாளர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் முன்னாள் மேயர் இ.ஆனோல்ட், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன.

இது தொடர்பான வாக்கெடுப்பைப் பகிரங்கமாக நடத்துவதா அல்லது இரகசியமாக நடத்துவதா என உறுப்பினர்களிடத்தில் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதன்போது, சபை உறுப்பினர் அனைவரும் பகிரங்க வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்றே கோரியிருந்தனர். இதன்படி மேயர் தெரிவுக்கான வாக்கெடுப்பு பகிரங்கமாக நடத்தப்பட்டது.

வாக்கெடுப்பில் ஆனோல்ட்டுக்கு 20 வாக்குகளும், மணிவண்ணனுக்கு 21 வாக்குகளும் கிடைத்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 15 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 3 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் உறுப்பினரும் மற்றும் ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் ஆனோல்ட்டுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 10 உறுப்பினர்களும், ஈழுமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) 10 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் மணிவண்ணனுக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 3 உறுப்பினர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஓர் உறுப்பினர் என 4 பேர் வாக்கெடுப்பில் நடுநிலை வகித்தனர்.

இதற்கமைய யாழ். மாநகர சபையின் புதிய மேயராக சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சபையில் அறிவித்தார்.

கடந்த 16ஆம் திகதி யாழ். மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் சமர்ப்பிக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டதால் மாநகர மேயராகப் பதவி வகித்த இ.ஆனோல்ட் தனது பதவியை இழந்திருந்தார். இதனால் புதிய மேயரைத் தேர்வு செய்வதற்கான வாக்கெடுப்பு இன்று நடத்தப்பட்டது.

## நல்லூர் பிரதேச சபை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதேசசபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது தடவைகள் தோற்கடிக்கப்பட்டதையடுத்து தவிசாளர் தா.தியாகமூர்த்தி தனது பதவியை இழந்திருந்தார். இந்நிலையில், பிரதேச சபையின் புதிய தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான விசேட அமர்வு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் இன்று பிற்பகல் நடைபெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் (ரெலோ) சார்பில் குமாரசாமி மதுசுதனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் பத்மநாதன் மயூரனும் முன்மொழியப்பட்டனர்.

தொடர்ந்து வாக்கெடுப்பைப் பகிரங்கமாக நடத்துவதா அல்லது இரகசியமாக நடத்துவதா என உறுப்பினர்களிடத்தில் வாக்கெடுப்பு இடம்பெற்றது.

சபை உறுப்பினர்கள் அனைவரும் பகிரங்க வாக்கெடுப்பு கோரியதால், தவிசாளர் தெரிவு பகிரங்க வாக்கெடுப்பு மூலம் இடம்பெற்றது.

இதன்படி மதுசுதன் 08 வாக்குகளையும், மயூரன் 10 வாக்குகளையும் பெற்றனர்.

மதுசுதனுக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 5 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 2 உறுப்பினர்களும் மற்றும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) ஓர் உறுப்பினரும் வாக்களித்தனர்.

மயூரனுக்கு ஆதரவாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 3 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் (ஈ.பி.டி.பி) 3 உறுப்பினர்களும், சுயேச்சைக் குழுவின் 2 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் ஓர் உறுப்பினரும் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஓர் உறுப்பினரும் வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஓர் உறுப்பினரும் மற்றும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினரும் சபை அமர்வில் கலந்துகொள்ளவில்லை.

அதன் அடிப்படையில் நல்லூர் பிரதேச சபையின் புதிய தவிசாளராக மயூரன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்று வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சபையில் அறிவித்தார்.

## புதிய அரசமைப்பு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விமர்சனங்களை முன்வைத்தனர் என்பதுடன் திட்டமிட்ட அடிப்படையில் தேர்தல் பிற்போடப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டினர்.

அப்படியானால் தற்போது தேர்தலை நடத்தும் பொறுப்பு எமது அரசுக்கு இருக்கின்றது. இது பற்றியே அமைச்சரவையில் கலந்துரையாடப்பட்டிருக்கலாம்.

அத்துடன் மாகாண சபை முறைமை தொடர்பில் பல கோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக எமது அணிக்கு ஆதரவு வழங்கியவர்களில் சிலர், மாகாண சபைகள் வெள்ளை யானை எனவும், அவை இந்தியாவால் பலவந்தமாகத் திணிக்கப்பட்டவை எனவும் வாதிட்டு வருகின்றனர்.

தற்போது புதியதொரு அரசமைப்பை இயற்றும் பணி இடம்பெற்று வருகின்றது. தேர்தல் முறைமை குறித்து அதில் முடிவு எடுக்கப்படும். நிர்வாக முறைமையும் தீர்மானிக்கப்படும். எனவே, புதிய அரசமைப்பு இயற்றப்படும் வரை மாகாண சபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதே சிறப்பு - என்றார்.

## வடக்கு - கிழக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அத்துடன் கூட்டமைப்பின் யோசனைகளில் எதுவும் முழுமையாக ஏற்றுக் கொள்ளக்கூடிய யோசனை அல்ல எனவும் அவர் குறிப்பிட்டார்.

புதிய அரசமைப்பில் மத்திய மற்றும் பிராந்தியங்களின் ஐக்கியத்தைக் கொண்டதாக அரசு முறைமை அமைய வேண்டும். அதில் ஒரு பிராந்தியமாக தமிழ் பேசும் மக்களின் பிரதான வாழிடமான வடக்கு - கிழக்கு இருத்தல் வேண்டும் என்று புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நிபுணர்கள் குழுவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்துள்ள யோசனைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த யோசனைக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ள அமைச்சர் சரத் வீரசேகர மேலும் தெரிவித்ததாவது:-

தமிழீழ விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டாலும் அவர்களை உயிர்ப்பிக்கும் வகையிலும், அவர்களின் கனவை நனவாக்கும் வகையிலுமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றனர்.

மாகாண சபை முறைமை மூலம் தனி இராஜ்ஜியத்தை நடத்தலாம் என்ற எண்ணத்துடனேயே கூட்டமைப்பினர் உள்ளனர். அதிலும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழர்களின் தாயக பூமி என்ற மமதையுடனும், அந்த இரு மாகாணங்களையும் இணைக்க வேண்டும் என்ற நப்பாசையுடனும் கூட்டமைப்பினர் உள்ளனர்.

இதன்காரணமாகவே மாகாண சபை முறைமைக்கு முடிவுகட்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் உறுதியாக உள்ளேன். அதுதான் மாகாண சபைத் தேர்தல் வேண்டாம் என்று வலியுறுத்தி வருகின்றேன் - என்றார்.

## இலங்கையில் மிகவும் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

117 வயதுடைய வேலு பாப்பானி அம்மா என்ற மூதாட்டியே நேற்றிரவு மரணமடைந்துள்ளார்.

இரு பிள்ளைகளின் தாயாரான இவர், 1903 ஆம் ஆண்டு மே 03ஆம் திகதி, களுத்துறை மாவட்டம், தொடங்கொடை பிரதேசசெயலகபிரிவில் உள்ள நேஹின்ன கிராமத்தில் பிறந்தார்.

அவரது விபரங்கள் அரசால் வழங்கப்பட்ட முதியவரின் அடையாள அட்டை மூலமாகவும் சரிபார்க்கப்பட்டுள்ளன.

இதேநேரம், உலக முதியோர் தினத்தைக் குறிக்கும் வகையில் இந்த ஆண்டு ஒக்டோபர் முதலாம் திகதி இலங்கையின் மிகவும் வயதான பெண் எனத் தெரிவிக்கும் சான்றிதழை முதியயோருக்கான தேசிய சபை குறித்த பெண்மணிக்கு வழங்கியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# தோல்விக்கு யார் பொறுப்பு?

யாழ் மாநகர மேயர் தேர்வு முடிந்து விட்டது. எதிர்பார்க்கப்பட்டதே நடந்தது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா மீண்டும் மேயர் தேர்வுக்கு நிறுத்திய இமானுவேல் ஆர்னோல்ட் தோற்று விட்டார். இன்றை நிலையில் எந்தக் கட்சியிலும் இல்லாமல் – திரிசங்கு சொர்க்க நிலையில் – தடுமாறிக் கொண்டிருந்த விஸ்வலிங்கம் மணிவண்ணன் யாழ் நகரத்தின் முதலாவது பிரஜையின் கதிரையில் அமர வைக்கப்பட்டிருக்கின்றார்.

இந்த விவகாரத்தை – இந்தப் பெறுபேறை – சுருக்கமாகக் கூறுவதாயின், யாழ்ப்பாணத்து யோகர் சுவாமியின் “எப்பவோ முடிந்த காரியம்” என்ற ஒரு வரி வாக்கியத்தில் கூறி, விமர்சித்து, முடித்து விடலாம்.

ஆனால், தமிழரசு – தமிழ்க் கூட்டமைப்பு – இந்த அவமானகரமான பின்னடைவைச் சந்திப்பதற்குக் காரணமாக அமைந்த தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசாவும், அவரது சகாக்களும் இந்தப் பின்னடைவுகளுக்கான முழுப் பொறுப்பையும் ஏற்காமல், யோகர் சுவாமியின் பிற மகா வாக்கியங்களான, ‘யாமறியோம்’ என்றோ அல்லது ‘ஒரு பொல்லாப்புமில்லை’ என்றோ கூறித் தப்பி விட முடியாது.

இந்தப் பெரும் பின்னடைவு நிலைக்கு அவர்கள் ஒவ்வொருவரும் பொறுப்பேற்றேயாக வேண்டும்.

இந்த மேயர் தெரிவில் கூட்டமைப்பின் வேட்பாளராக மீண்டும் இமானுவல் ஆர்னோல்ட்டை நியமிப்பது என்பது முடிவு செய்த போதே விடயம் இப்படித்தானாகும் என்பது ஓரளவு துலாம்பரமாகி விட்டது.

தன்பாட்டில் பழுத்துத் தன் மடியில் விழ வேண்டிய பழத்தை அடித்துக் கெடுத்து நாசமாக்கியிருக்கின்றது தமிழரசுத் தலைமை என்றுதான் கூறவேண்டும்.

யாழ் மாநகர சபை மேயர் தேர்தலில் மட்டுமல்ல, நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவிலும் கூட அதுதான் நடந்தது.

சாத்தியமானவரைத் தேர்ந்து, உரிய பதவியில் இருத்தி, காய்களை வெற்றிகரமாக நகர்த்துவதுதான் அரசியல். அந்த வெற்றிகரமான நடவடிக்கையில் தோல்வி கண்டிருக்கின்றது தமிழரசுத் தலைமை.

இரண்டு சபைகளுக்கும் தாங்கள் பெயர் குறிப்பிட்ட பிரமுகர்களைக் களம் இறக்கினால் தேர்தல் நடக்கும், தோல்வி நிச்சயம் என்பதை அறியாத நிலையில் தமிழரசு – கூட்டமைப்பு – தலைவர்கள் இருக்கவில்லை என்பது உறுதி.

யாழ். மாநகர சபையில் கூட்டமைப்புக்கு தனித்துப் பெரும்பான்மை இல்லை. இரண்டு தடவைகள் வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து, அதில் தோற்கடிக்கப்பட்ட முன்னாள் மேயர் இமானுவேல் ஆர்னோல்ட் தவிர்ந்த வேறு யாரை தமிழ்க் கூட்டமைப்பு நிறுத்தினாலும் ஆதரவு தருவோம் என்று பிற கட்சிகள் முற்கூட்டியே தெளிவாக அறிவித்திருந்தன.

இந்தப் பின்புலத்தில் –

* இரண்டு தடவைகள் வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து, அதில் தோற்றுப் போனவரை மீண்டும் வேட்பாளராக நிறுத்துவது உண்மையில் ஜனநாயக விழுமியத்துக்கு மாறானது.

* அதன் காரணமாக அவருக்கு அந்த வாய்ப்பளிக்காமல், சொலமன் சிறில் போன்ற கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவருக்கு அந்த வாய்ப்பை அளித்திருந்தால், தேர்தல் நடக்காமலேயே மேயராக அவர் ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டு, கூட்டமைப்பின் கைகளிலேயே சபை நிர்வாகம் தொடர்ந்து இருந்திருக்கும் என்ற விடயம் யாழ்ப்பாண அரசியலில் அரிச்சுவடி படித்தவருக்குக் கூட தெரிந்த விவகாரமாக இருந்தது.

* ஆனோல்ட்டையே மீண்டும் வேட்பாளராக நிறுத்தினால் இப்படித்தானாகும் என்று படித்துப் படித்து பல தடவைகள், பல தரப்புகளும் கூறின. அது மட்டுமல்ல, அத்தகைய முடிவை எடுத்தால் – மேயர் தெரிவு உறுப்பினர்களிடையே வாக்கெடுப்பு என்று ஆகி விட்டால் – முடிவு செய்யும் அதிகாரம் ஈ.பி.டி.பியின் கைகளில் – அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கைகளில் – போய் விழுந்து விடும் என எதிர்பார்க்கப்பட்டது.

* சந்தர்ப்பவசமாக யாழ் மாநகர சபையின் நாற்பத்தியைந்து உறுப்பினர்களும் பகிரங்க வாக்கெடுப்புக்குக் கோரியமையால் மேயர் தெரிவு பகிரங்கமாக நடந்தது. மாறாக, இரகசிய வாக்கெடுப்பு என்றால் கூட்டமைப்பு நிறுத்திய வேட்பாளரின் தோல்வி இப்போதையதைப் போல அரும்பொட்டில் – ஒரு வாக்கு வித்தியாசத்தில் – என்று இருந்திருக்காது, அவமானகரமாக இருந்திருக்கும் என்பது நிச்சயம்.

– இவை எல்லாம் முன்னரே உய்த்துணரக் கூடியவையாக இருந்தும் தங்கள் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள், அரசியல் உள் நோக்கங்கள், இலக்குகள் கருதி, கட்சிக்கும், கூட்டமைப்புக்கும் பின்னடைவு தேடித் தரும் முடிவுகளை எடுத்து நடைமுறைப்படுத்திய அரசியல் தலைவர்கள் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

ஆனால், இங்கு அது நடக்காது. ஏனென்றால் நீதிக்கு, தார்மீகத்துக்கு, நியாயத்துக்கு பயந்த அரசியல் தலைவர்கள் இங்கு இல்லை. தாங்கள் இங்கு – இந்தக் காலத்தில் – அரசியல் செய்து சுய லாபமீட்டுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டவர்களைத் தானே நாம் நம் தலைவர்களாகக் கொண்டிருக்கின்றோம்...!

# ஜனவரியில் விமான நிலையம் உத்தியோகபூர்வமாக திறப்பு!



ஜனவரி மாதம் நடுப்பகுதியில் விமான நிலையங்கள் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் காரணமாக இலங்கையின் அனைத்து சர்வதேச விமான நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

இந்த நிலையில், தற்போது பைலட் திட்டத்துக்கு அமைவாக குறைந்த அளவிலான சுற்றுலாப் பயணிகளை அழைப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, ஜனவரி மாதம் நடுப்பகுதியில் விமான நிலையங்கள் உத்தியோகபூர்வமாகத் திறக்கப்படும் என சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

வீழ்ச்சியடைந்துள்ள சுற்றுலாத்துறை குறுகிய காலத்தில் மீள் கட்டியெழுப்பும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்தும் சுகாதார வழிமுறைகளை முழுமையாகச் செயற்படுத்தி எதிர்வரும் ஜனவரி மாதம் நடுப்பகுதியில் விமான நிலையம் திறக்கப்படும். அத்துடன் வணிக விமான சேவைகளும் ஆரம்பிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சுற்றுலா பிரயாணிகளால் வைரஸ் தொற்று ஒருபோதும் பரவலடையாது. சுற்றுலாத்துறை அமைச்சு அனுமதி வழங்கியுள்ள ஹோட்டல்களில் மாத்திரமே தங்க முடியும்.

சுற்றுலாப் பிரயாணிகளைக் கண்காணிப்பதற்காக விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அதேநேரம், வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நாட்டுக்கு வரவழைக்கும் நடவடிக்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அன்டிஜன் பரிசோதனையில் 74 தொற்றாளர் அடையாளம்!

மேல் மாகாணத்தில் இருந்து வெளியேறுபவர்ளை அடையாளம் காண்பதற்காக வெளியேறும் இடங்களில் எழுமாறாக மேற்கொள்ளப்படும் அன்டிஜன் பரிசோதனைகளில் மேலும் 13 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, இந்த பரிசோதனை மூலம் இதுவரை 74 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் 18 ஆம் திகதி முதல் மேல் மாகாணத்தைவிட்டு வெளியேறுபவர்களை அடையாளம் காண்பதற்காக மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனைகளின் எண்ணிக்கை 10 ஆயிரத்து 986 ஆக அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், இந்த அன்டிஜன் சோதனைகள் ஜனவரி 5 ஆம் திகதி வரை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# கொள்ளுப்பிட்டியில் கட்டடத்தின் கீழ்தளம் நீரில் மூழ்கி ஒருவர் சாவு!

கொழும்பு – கொள்ளுப்பிட்டியில் கட்டடம் ஒன்றின் கீழ்தளம் நீரில் மூழ்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் கடந்த (செவ்வாய்க்கிழமை) இரவு பெய்த மழையால் கொள்ளுப்பிட்டி – டுப்ளிகேன் வீதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடம் ஒன்றின் கீழ்தளமே இவ்வாறு நீரில் மூழ்கியுள்ளது.

இந்தக் கட்டட நிர்மாணப் பணியில் ஈடுபடுகின்ற ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் இந்தக் கட்டடத்தின் கீழ்தளத்தில் மேலும் 5 பேர் சிக்கி இருந்த நிலையில் பாதுகாப்பாக மீட்கப்பட்டனர்.

இந்த நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# வெளிநாட்டிலிருந்து பலர் தாய்நாடு திரும்பினார்கள்!

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த 337 இலங்கையர்கள் இன்று (புதன்கிழமை) காலை நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி, ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து 305 பேர், மாலைதீவிலிருந்து 25 பேர் மற்றும் கட்டாரிலிருந்து 7 பேர் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர் என கொவிட் – 19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் அனைவரும் தனிமைப் படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மேலும் 150 பேர் நாட்டுக்கு வருகை தரவுள்ளனர் என கொவிட் – 19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதன்படி ஐக்கிய அரபு இராச்சியம், இந்தியா, மாலைதீவு, பங்களாதேஷ், சிங்கப்பூர் மற்றும் சீனா ஆகிய நாடுகளிலிருந்து மேலும் 150 பேர் நாட்டுக்கு வருகை தரவுள்ளனர் என அந்த மையம் தெரிவித்துள்ளது.

# 12 மணி நேரத்தில் திருமலையில் 7 பேருக்குக் கொரோனாத் தொற்று!

திருகோணமலையில் கடந்த 12 மணித்தியாலங்களில் 7 புதிய கொரோனா தொற்றாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

அதன்படி குச்சவெளியில் ஒருவருக்கும் மூதூரில் 5 பேருக்கும் உப்புவெளியில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதற்கமைய திருகோணமலையின் கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 134 ஆக அதிகரித்துள்ளது.

அதன்படி கோமரங்கடவலயில் இதுவரையில் 3 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள அதேநேரம், கிண்ணியாவில் மொத்தமாக 11 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.


அத்தோடு, குச்சவெளியில் 2 பேருக்கும் மூதூரில் மொத்தமாக 41 பேருக்கும் சேருவிலயில் 3 பேருக்கும் இதுவரையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேலும் தம்பலகாமன் பகுதியில் 6 பேருக்கும் திருகோணமலையில் 64 பேருக்கும் உப்புவெளியில் 4 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சமூக நல அறிவிப்பு

# முகக் கவசங்களை உங்கள் கழுத்தில் தொங்கவிடாதீர்கள்....!






முகக் கவசங்களை அணிவதற்கு முன்னர் கைகளைக் கழுவிக் கொள்ளுங்கள்.



முகக் கவசங்கள் உங்களுடைய மூக்கையும் வாயையும் மூடுவதையும், உங்களுடைய கன்னத்தின் கீழாக, உங்கள் மூக்கின் மேலாக மற்றும் உங்களுடைய முகத்தின் பக்கவாட்டுகளில் பொருந்துவதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.



முகக் கவசங்களை அணியும்போது அதன் முன்பக்கத்தை தொடாதீர்கள்.



காதில்மாட்டியுள்ள வளையங்களைப் பற்றியிழுத்து அல்லது முடிச்சுகளை அவிழ்த்து உங்கள் முகக் கவசங்களைக் கவனமாக கழற்றுங்கள்.



முகக் கவசங்களைக் கழற்றுவதற்கு முன்னரும் முகக் கவசங்களைக் கழற்றிய பின்னரும் உங்கள் கைகளைக் கழுவுங்கள் அல்லது சுத்தம் செய்யுங்கள்.

**ஒவ்வொரு நாளும் துணி முகக் கவசங்களை சூடான நீரில் (60செல்சியஸ்) சவர்க்காரம் அல்லது சலவைத்தூள் கொண்டு துவையுங்கள்.**



**சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-**


பசுமை PASUMAI

## பசுமை உயிரியல் கூட்டுப்பசளை

பச்சை இலைகள், தாவர கழிவுகள், கரி ஆகிய மூலப்பொருட்களால் தயாரிக்கப்பட்டது.
விலங்குக் கழிவுகள் அற்றது.
சாதாரண கூட்டுப்பசளைகளை விட மிக மிக அதிகமான நுண்ணுயிரிகளையும் தாவர போசனை மூலகங்களையும் தன்னகத்தே கொண்டது.



போசணை உள்ளடக்கம்:

| | | |
|---|---|---|
| சேதன காபன் | 25.7 | 25% |
| நைதரசன் (தழைச்சத்து) N | 2.0 | 3.5% |
| பொஸ்பரஸ் (மணிச்சத்து) P | 0.5 | 1.0% |
| பொட்டாசியம் (சாம்பல்சத்து) K | 0.2 | 0.6% |

Ca, Mg, Mn, Zn, Fe, Cu ஆகியவற்றுடன் ஏனைய தாவர நுண் போசணை மற்றும் போசணை மூலகங்கள்

உற்பத்தி ஆதரவு
சார பூமி லங்கா - உயிரி உற்பத்தி நிறுவனம்
ஆராய்ச்சி ஆய்வுகூடம், கண்டி.

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

021 492 7778 pasumailanka@gmail.com www.pasumai.lk facebook.com/pasumaiagri

# ஒக்ஸ்போர்ட் தடுப்பூசியை பயன்படுத்த அனுமதி!



ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் தயாரிக்கப்பட்ட கொரோனா தடுப்பு மருந்தை தமது நாட்டில் பயன்படுத்துவதற்கு பிரித்தானியா அனுமதி வழங்கியுள்ளது.

50 மில்லியன் மக்களுக்காக, பிரித்தானியாவால் 100 மில்லியன் மருந்துகளுக்கு முற்பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம், ஏப்ரல் மாதமளவில் கொரோனா தடுப்பு மருந்தைத் தயாரிக்கும் பணிகளை ஆரம்பித்தன.

இந்த தடுப்பு மருந்து, பாதுகாப்பானதும் தரமிக்கதும் என நிபுணர்களால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பிரித்தானியாவில் அதிகரித்து வரும் கொரோனா வைரஸ் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 23 லட்சத்து 82 ஆயிரத்து 865 ஆக அதிகரித்துள்ளது.

ஒரே நாளில் 53 ஆயிரத்து 135 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா வைரஸ் காரணமாக அங்கு ஒரே நாளில் 414 பேர் உயிரிழந்துள்ளனர். இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 71 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

# வூஹானில் அவசரகால தடுப்பூசி வழங்கும் பணிகள் ஆரம்பமாகின!

சீனாவின் வூஹான் நகரில், அவசரகால தடுப்பூசி வழங்கும் பணி ஆரம்பமாகியுள்ளன.

ஹுபெய் மாகாண தலைநகரான வூஹானில், கடந்தாண்டு, டிசெம்பர், 31 ஆம் திகதி முதல் கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

இதையடுத்து, 1.10 கோடி மக்கள் தொகை கொண்ட வூஹான் நகரில், ஜனவரி மாதம் 23 ஆம் திகதி ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

தொற்று பரவல் அதிகரித்துள்ளமையை அடுத்து, ஹுபெய் மாகாணம் முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டது.

ஹுபெயில் தொற்று பரவல் கட்டுக்குள் வந்ததை அடுத்து, ஏப்ரல், 8 இல் ஊரடங்கு தளர்த்தப்பட்டது.

ஹுபெய் மாகாணத்தில், இதுவரை, 68 ஆயிரம் பேருக்கு தொற்று உறுதியாகி உள்ளது. அதில், வூஹானில் மட்டும், 50 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டனர்.

மே மாதம், வூஹான் நகரில் உள்ள அனைவருக்கும் கொரோனா பரிசோதனையை சீன அரசாங்கம் முன்னெடுத்திருந்தது.

இதில், மிக சிறிய எண்ணிக்கையிலேயே தொற்று பரவல் இருக்கின்றமை கண்டறியப்பட்டது.

தலைநகர் பீஜிங் உள்ளிட்ட முக்கிய நகரங்களில், மிகப் பெரிய அளவிலான கொரோனா பரிசோதனை நடவடிக்கைகளை, சீன அரசாங்கம் முன்னெடுத்தது. இதில், பீஜிங்கை சேர்ந்த, 27 பேருக்கு, நேற்று முன்தினம் தொற்று உறுதியானது.

சீன தயாரிப்பான, 11 தடுப்பூசிகள், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் சோதனையில் உள்ளன.

இந்நிலையில், கொரோனா பரவ ஆரம்பித்த வூஹான் நகரில், அவசரகால தடுப்பூசி வழங்கும் பணியை, அந்நாட்டு அரசாங்கம் அண்மையில் ஆரம்பித்தது.

ஹுபெய் மாகாணத்தின், 15 மாவட்டங்களில் உள்ள, 48 முகாம்களில், 18 – 59 வயது வரையிலான, சில குறிப்பிட்ட சிலருக்கு மாத்திரம், அவசரகால தடுப்பூசி வழங்கப்பட்டு வருவதாக, வூஹான் நகர நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மைய அதிகாரி தெரிவித்தார்.

தடுப்பூசி செலுத்திக் கொள்பவர்கள், ஒரு மாத காலத்திற்குள், மேலும் இரண்டு, 'டோஸ்' மருந்துகளை செலுத்திக் கொள்ள வேண்டும் என அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

# சர்வதேச நாடுகளை அச்சுறுத்தும் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு!

சர்வதேச அளவில் கடந்த 24 மணித்தியாலங்களில் 6 லட்சத்து 11 ஆயிரத்து 942 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதற்கமைய, சர்வதேச ரீதியில் கொரோனா தொற்றால் இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 8 கோடி 23 லட்சத்து 7 ஆயிரத்து 88 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், கொரோனா தொற்றால் கடந்த 24 மணித்தியாலங்களில் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உயிரிழப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய கொரோனா தொற்றால் 17 லட்சத்து 95 ஆயிரத்து 233 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, சர்வதேச ரீதியில் கொரோனா தொற்றால் அதிகளவு பாதிக்கப்பட்ட நாடுகளின் தரவரிசையில் அமெரிக்கா தொடர்ந்தும் முதல் இடத்தில் உள்ளது.

அங்கு இதுவரை மொத்தமாக ஒரு கோடியே 99 லட்சத்து 77 ஆயிரத்து 704 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# 30 வருடங்கள் சிறையில் கழித்த இஸ்ரேல் உளவாளிக்கு வரவேற்பு



அமெரிக்காவின் முன்னாள் கடற்படை ஆய்வாளர் 30 வருட சிறைவாசத்தை முடித்து மீண்டும் இஸ்ரேல் திரும்பியுள்ளார்.

இஸ்ரேலின் உளவாளியாக செயற்பட்ட குற்றத்துக்காக அமெரிக்காவால் சிறைப்பிடிக்கப்பட்ட 66 வயதான ஜொனாத்தன் பொலார்ட், ஏறக்குறைய 30 வருடங்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் விடுதலை செய்யப்பட வேண்டும் என பலராலும் குரல் எழுப்பப்பட்டது.

கடந்த 1987 ஆம் ஆண்டு உளவு நடவடிக்கையில் ஈடுபட்டதாக அவர் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் அவர் இன்று இஸ்ரேலை வந்தடைந்துள்ளார்.

பொலார்டின் விடுதலைக்கு, இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு பல நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளார் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், நாட்டை வந்தடைந்த பொலார்ட் மண்ணை முத்தமிட்டு தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'நீங்கள் தற்போது உங்களது தாய்நாட்டில் இருக்கிறீர்கள். நீங்கள் சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் உங்களது வாழ்க்கையை ஆரம்பிக்கலாம்' எனத் தெரிவித்துள்ளார்.

பொலார்டுடன், அவரது மனைவியும் இஸ்ரேலை வந்தடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கமலா ஹாரீஸிற்கு கொரோனா தடுப்பூசி!



அமெரிக்காவின் துணை ஜனாதிபதியாக தெரிவாகியுள்ள கமலா ஹாரிஸ், கொரோனா தடுப்பூசி போட்டுக் கொண்டுள்ளார்.

அவருக்கு மாடர்னா தடுப்பூசி செலுத்தப்பட்டது தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்பட்டது.

வொஷிங்டனில் உள்ள யுனிடெட் மெடிக்கல் சென்டரில் முதல் டோசை போட்டுக் கொண்டார். அதேபோன்று கமலாவின் கணவரும் மாடர்னா மருந்தை போட்டுக்கொண்டார்.

மக்களுக்குத் தடுப்பூசி மீது நம்பிக்கை ஏற்பட ஏற்கனவே ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜோ பைடன் தடுப்பூசி போட்டுக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை பின்னடைவை எதிர்நோக்கியுள்ளது - பைடன்

அமெரிக்காவில் கொரோனா தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை பின்னடைவை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜோ பைடன் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இந்த வருட இறுதிக்குள் 20 மில்லியன் பேருக்கு கொரோனா தொற்றுக்கு எதிரான தடுப்பூசிகளை வழங்க அமெரிக்கா திட்டமிட்டிருந்தது.

எனினும், தற்போதுவரை 21 லட்சம் பேருக்கு மாத்திரமே கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன என அமெரிக்க தொற்று நோய் கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், நாடு எதிர்நோக்கியுள்ள பாரிய சவாலில் இருந்து மீளெழுவதற்கான செயற்பாட்டில் பின்னடைவு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ஜோ பைடன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# அமெரிக்க எம்.பியாகத் தேர்வான லெட்லோ கொரோனாவுக்கு பலி



குடியரசு கட்சியை சேர்ந்தவரும், அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டவருமான லெட்லோ கொரோனாவுக்கு பலியாகியுள்ளார்.

லூசியானாவில் இருந்து பிரதிநிதிகள் சபைக்கு தேர்வான அவருக்கு 18ஆம் திகதி கொரோனா உறுதியாகியிருந்தது. இதையடுத்து அவர் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வந்த நிலையில், நேற்று மாலை உயிரிழந்தார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது மறைவுக்கு லூசியானா மாகாண ஆளுநர் ஜான் பெல் எட்வர்ட்ஸ், பிரதிநிதிகள் சபை சபாநாயகர் நான்சி பெலோசி ஆகியோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

மணமகன் விவரம்
பிறந்த திகதி - 1997.10.21
மதம் - இந்து V
நட்சத்திரம் - திருவோணம்
செவ் - 12இல்
பாவம் - 51
கல்வி - பட்டதாரி
தொழில் - முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்

மணமகள் விவரம்
பிறந்த திகதி - 1988.08.22
மதம் - இந்து V
நட்சத்திரம் - கேட்டை
பாவம் - 46
செவ் - 7இல்
கல்வி - Soft. Engineer
தொழில் - Soft. Engineer
எதிர்பார்ப்பு - கொழும்பில் Doctor & Engineer தேவை

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528



# ரஜினியின் முடிவுக்கு சீமான் பெரு வரவேற்பு

சென்னை வளசரவாக்கத்தில் உள்ள நாம் தமிழர் கட்சி அலுவலகத்தில் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாள்வார் நினைவு நாளையொட்டி அவரது படத்துக்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு பின்னர் சீமான் அளித்த பேட்டி வருமாறு:-

ரஜினிகாந்தின் முடிவை நான் வரவேற்கிறேன். இதனை எனது டுவிட்டரிலும் பதிவு செய்து இருந்தேன். அவரும், அவரது குடும்பத்தினரும் கருதுவது போல அவரது உடல் நலம் மிகவும் முதன்மையானது.

இதனை நான் தொடர்ந்து கூறி வந்துள்ளேன். கடந்த காலங்களில் ரஜினி ரசிகனாக இருந்துள்ளேன். அரசியல் பயணத்தில் கடும் சொற்களை பயன்படுத்தி உள்ளேன். அது அவரையும், குடும்பத்தினரையும், ரசிகர்களையும் காயப்படுத்தி இருந்தால் அதற்காக வருந்துகிறேன். இனி எப்போதும் எங்களின் புகழ்ச்சிக்குரியவர் ரஜினிகாந்த்.

ரஜினி மிகச்சிறந்த திரை ஆளுமை கொண்டவர். அதில் யாருக்கும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது. ஆசிய கண்டம் முழுவது அவரது புகழ் வெளிச்சம் பரவி கிடக்கிறது.

தமிழ் மக்கள் அவரை பெரிதும் கொண்டாடுகிறார்கள். நாம் தமிழர் பிள்ளைகளும் அவரை கொண்டாடுவார்கள். அரசியல் அவருக்கு அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். அவர் எடுத்த முடிவை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

நாங்கள் கடுமையாக எதிர்த்ததால்தான் ரஜினி இந்த முடிவை எடுத்தார் எனக் கருத முடியாது. தலைவன் என்பவன் தண்ணீரில் தன்னையே கரைத்துக் கொள்பவனாகவும், மெழுகுவர்த்தியாகத் தன்னையே உருக்கி வெளிச்சம் தருபவனாகவும் இருக்க வேண்டும்.

அதற்கு சினிமா புகழ் வெளிச்சம் மட்டும் போதாது. ரஜினி அரசியலுக்கு வராததற்கு அவரது பிள்ளைகள் இருவரும், "வேண்டாமப்பா" என்று சொன்னதே காரணம் என்று எனக்கு கூறினார்கள். இளம் வயதிலேயே அமைதி, நிம்மதியை தேடி சென்றவர். இப்போது அவருக்கு கூடுதலாக நிம்மதியும் அமைதியும் தேவைப்படும். அரசியலில் உள்கட்சி பிரச்சினையையே சமாளிக்க முடியாது.

என்னை மாதிரி காட்டானாலேயே சமாளிக்க முடியவில்லை. ரஜினியால் நிச்சயமாக சமாளிக்க முடியாது. அரசியலில் இறக்கி விட்டு எல்லோரும் திட்டுவார்கள், அதனை அவரால் தாங்க முடியாது. அதனால்தான் அரசியல் வேண்டாம் என்று கூறினேன். நடிகர்களை எதிர்ப்பது, நாம் தமிழர் கட்சியின் கொள்கை இல்லை.

வருகிற தேர்தலில் மு.க ஸ்டாலினை எதிர்த்து போட்டியிடுவேன். எந்த தொகுதியில் அவர் களம் இறங்கினாலும் அங்கு நான் போட்டியிடுவது உறுதி. இந்த தேர்தலில் தி.மு.க.வுக்கு மாற்று அ.தி.மு.க. இல்லை. நாம் தமிழர் கட்சிக்கும், தி.மு.க.வுக்கும் தான் போட்டி. அ.தி.மு.க. எதிர்க்க வேண்டிய கட்சியே இல்லை.

ரஜினிகாந்த் வருகிற தேர்தலில் அ.தி.மு.க.வுக்கு ஆதரவு அளிப்பார் என்று நான் நினைக்கவில்லை. - இவ்வாறு சீமான் கூறினார்.

# தேவைப்பட்டால் எல்லை தாண்டியும் இந்தியப் படை தாக்குதல் நடத்தும்!

## பாகிஸ்தானுக்கு மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் எச்சரிக்கை



தேவைப்பட்டால் எல்லை தாண்டிச் சென்று பயங்கரவாத முகாம்களை இந்திய இராணுவம் தாக்கி அழிக்கும் என்று பாகிஸ்தானுக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

டெல்லியில் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பேட்டியளித்தார். அதில் அவர், பாகிஸ்தான் தோன்றியது முதலே, எல்லையில் தீங்கை ஏற்படுத்தும் செயல்களில் ஈடுபட்டு வருவதாகக் குற்றம்சாட்டினார்.

இந்திய இராணுவ வீரர்கள் நமது நாட்டில் இருக்கும் பயங்கரவாதிகளை மட்டும் அழிப்பதோடு அல்லாமல், தேவைப்பட்டால் எல்லைத் தாண்டி சென்று பயங்கரவாத முகாம்களை தாக்கி அழிப்பார்கள் என்று கூறிய அவர், அதற்கான திறன் இந்தியாவிடம் இருப்பதாகவும் தெரிவித்தார்.

சுயமரியாதைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தச் செயலையும் இந்தியா சகித்துக் கொண்டிருக்காது என்றும், மென்மையாக நடந்து கொள்வதால் நாட்டின் மீது (pride) தாக்குதல் நடத்துகையில் கைகட்டி வேடிக்கை பார்த்து கொண்டிருப்போம் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது என ராஜ்நாத்சிங் எச்சரித்தார். இந்தியா தனது கௌரவத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் எச்செயலிலும் சமரசம் செய்து கொள்ளாது எனவும் அவர் கூறினார்.

எல்லையில் சீனா பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருவதாகவும், இந்தியாவும் அதுபோல பணிகளை செய்து வருவதாகவும் கூறிய ராஜ்நாத்சிங், இதை அடுத்த நாடு மீது தாக்குதல் நடத்துவதற்காக மேற்கொள்ளவில்லை, மாறாக இந்திய மக்களுக்காகவே செய்கிறது என்றும் குறிப்பிட்டார்.

இதனிடையே, இந்தியாவில் புதிய வகை கொரோனா பாதித்த 20 பேரில், 8 பேர் டெல்லியை சேர்ந்தவர்கள் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. மேலும் டெல்லிக்கு அடுத்து அதிகபட்சமாக பெங்களூரில் 7 பேருக்கு அக்கொரோனா உறுதியாகியிருப்பதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் மட்டும் இங்கிலாந்தில் இருந்து இந்தியாவுக்கு 30 ஆயிரம் பேர் வந்திருந்தனர் எனவும், அவர்களை அடையாளம் காணும் பணி நடைபெறுவதாகவும் மத்திய அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 103 கிலோ தங்கம் திருட்டு விவகாரம் முன்பே அதிகாரிகளுக்குத் தெரியுமாம்

## எழுத்து பூர்வ விளக்கத்தால் திடீர் திருப்பம்

சென்னையில், 103 கிலோ தங்கம் திருடு போனது குறித்து, சி.பி.ஐ. மற்றும் எஸ்.பி.ஐ. அதிகாரிகளுக்கு, 6 மாதங்களுக்கு முன்பே தெரியும் என முன்னாள் நிர்வாக இயக்குநர், சி.பி.சி.ஐ.டி. பொலிஸாரிடம் அளித்துள்ள எழுத்து பூர்வ விளக்கம் அதிர்வலைகளை உருவாக்கியுள்ளது.

400 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்ட போது., தாம் உடனிருந்ததார் என சி.பி.ஐயிந் மஹஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவல் தவறானது என்றும், 2015இல், தாம் பதவி விலகிவிட்டார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் 103 கிலோ தங்கம் காணாமல் போனதை கடந்த ஓகஸ்ட் மாதம் வெளிக் கொண்டு வந்து, நிறுவனங்களுக்கான தேசிய சட்ட தீர்ப் பாயத்தில் முதன் முதலில் வழக்கு தொடுத்ததும் தாம்தான் என விஜயராஜ் சுராணா தெரிவித்துள்ளார்.

# சிறுமி பாலியல் வன்கொடுமைக் கொலை குற்றவாளிக்கு இரட்டைத் தூக்குத் தீர்ப்பு



புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோயில் அருகே 7 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்த வழக்கில், குற்றவாளிக்கு இரட்டை மரண தண்டனை வழங்கி மகளிர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த ஜூன் 30 ஆம் திகதி காணாமல் போன சிறுமி, அங்கு உள்ள குளத்தில் சடலமாக கண்டெடுக்கப்பட்டார். உடற்கூறு ஆய்வில் சிறுமி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்டமை தெரியவந்தது.

விசாரணையில் பூ வியாபாரம் செய்துவரும் ராஜா என்பவரைப் பொலிஸார் கைது செய்து சிறையில் அடைத்தனர். இந்த வழக்கில் புதுக்கோட்டை மகிளா நீதிமன்ற நீதிபதி சத்தியா குற்றவாளி சாமுவேல் என்ற ராஜாவுக்கு இரட்டை மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

# மரபணு மாற்றம் பெற்ற புதிய ரக வைரஸ் இந்தியாவில் 20 பேருக்குத் தொற்றியது

புதுடெல்லி,டிசெ.29

இந்தியாவில் புதிய வகை கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 20ஆக உயர்ந்துள்ளது.

இங்கிலாந்தில் கொரோனா வைரஸ் உருமாறி புதுவகை கொரோனா வைரஸாக உருவெடுத்துள்ளது. இது ஐரோப்பிய நாடுகளில் வேகமாகப் பரவி வருகிறது. இந்தியாவிலும் கால் எடுத்து வைத்துள்ளது.

புதிய வகை கொரோனா வைரஸால் இந்தியாவில் இதுவரை 6 பேர் பாதிக்கப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் தமிழகத்திலிருந்து ஒருவருக்குப் பாதிப்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்தியாவில் புதிய வகை கொரோனாவால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 20ஆக உயர்ந்துள்ளது. மேலும் 14 பேருக்கு உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 20ஆக அதிகரித்துள்ளது. இந்த 20 பேருக்கும் தொற்று உறுதி என ஆய்வு முடிவுகள் மூலம் தெரிய வந்துள்ளது. இதன்படி உத்தரப்பிரதேச சத்தை சேர்ந்த 2 வயது பெண் குழந்தை உட்பட 20 பேருக்கு புதிய வகை கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

புதிய வகை வைரஸில் மரபணு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என இங்கிலாந்திலிருந்து கிடைத்த அறிக்கையின் அடிப்படையில் இந்திய அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

முன்னதாக டிசம்பர் 23 முதல் 31 ஆம் திகதி வரை இங்கிலாந்திலிருந்து வரும் அனைத்து விமான சேவைகளும் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டன. அது பின்னர் ஜனவரி ஏழாம் திகதி வரை என நீடிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் இருந்து இந்தியா வந்த அனைவருக்கும் கொரோனாப் பரிசோதனை நடத்தப்பட்டது. அதன்படி, நவம்பர் 25 ஆம் திகதி முதல் டிசம்பர் 23 ஆம் திகதி வரை இந்தியா வந்த 33 ஆயிரம் பேரிடம் நடத்தப்பட்ட பரிசோதனையில் 114 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியானது.

# குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 31.12.2020 | வியாழக்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 பொருளியல் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 பொருளியல் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 கணக்கீடு (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08 தமிழ் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 08 வரலாறு (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09 தமிழ் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 09 வரலாறு (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 விஞ்ஞானம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 விஞ்ஞானம் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 இணைந்த கணிதம் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 இணைந்த கணிதம் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07 தமிழ் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07 வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 வணிகக்கல்வி (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 வணிகக்கல்வி (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 கணக்கீடு (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06 சிங்களம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 06 வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12 விவசாய விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13 விவசாய விஞ்ஞானம் (த) |

# 2021 ஜனவரி அல்லது பெப்ரவரியில் பொருத்தமான தடுப்பூசி அறிவிப்பு!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தகவல்

சர்வதேச ரீதியில் காணப்படும் கொவிட் தடுப்பூசிகளில் இலங்கைக்கு பொருத்தமானது எது என்பதை 2021 ஜனவரி அல்லது பெப்ரவரியில் அறிவிக்க எதிர்பார்த்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

அத்தோடு கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்களைத் தகனம் செய்யும் தீர்மானத்தில் சுகாதார அமைச்சு ஸ்திரமாகவுள்ளது. எனினும் அது தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள வைரஸ் தொடர்பான விசேட நிபுணர்கள் அடங்கிய குழுவில் அறிக்கை கிடைத்தவுடன் இந்தத் தீர்மானத்தின் அடுத்தகட்ட நடவடிக்கை தொடர்பாகவும் அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இலங்கைக்குப் பொறுத்தமான கொரோனாத் தடுப்பூசி எது என்பது தொடர்பில் ஆராய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவால் தற்போதும் இந்த விடயம் தொடர்பாக ஆராயப்பட்டு வருகிறது. இந்த குழுவால் உலகில் காணப்படும் சகல கொவிட் தடுப்பூசிகள் தொடர்பிலும் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றில் இலங்கைக்கு எது பொருத்தமானது எனத் தீர்மானிக்கப்படும்.

தடுப்பூசி தொடர்பில் அவதானம் செலுத்துவதற்கு விசேட ஜனாதிபதி செயலணியும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த செயலணியின் ஊடாக இராஜதந்திர மட்டத்தில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன. 2021 ஜனவரி அல்லது பெப்ரவரியில் எவ்வகையான தடுப்பூசியை பெற்றுக்கொள்வது, எந்தளவில் பெற்றுக்கொள்வது, எந்தெந்த வயது பிரிவினருக்கு அதனை வழங்குவது என்பது தொடர்பில் மக்களுக்கு அறிவிக்க எதிர்பார்த்துள்ளோம்.

சுற்றுலாத்துறை நடவடிக்கைகளுக்காக விமான நிலையம் திறக்கப்பட்டுள்ளது. இதன் போது சுற்றுலாப் பயணிகள் விமான நிலையத்திலிருந்து ஹோட்டல்களுக்கு செல்லும் போது அவர்கள் செல்லும் பேரூந்து சாரதி மற்றும் நடத்துநர் , ஹோட்டல் ஊழியர்கள் என்போர் குறிப்பிட்ட காலத்திற்கு அங்கிருந்து வெளியேறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட மாட்டாது. அதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மாறாக அவர்கள் வெளியிடங்களுக்குச் சென்றாலும் சமூகத்தில் ஒன்றிணைவதற்கு வாய்ப்பளிக்கப்பட மாட்டாது. அத்தோடு இவ்வாறான சுற்றுலாத்துறை சேவையில் ஈடுபடுவோரை சேவை நிறைவில் மேலும் 14 நாள்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது

இவ்வாறான சூழலுக்கு மத்தியில் தற்போது சிவனொளிபாதமலை யாத்திரை ஆரம்பமாகியுள்ளது. இந்த யாத்திரைக்குச் செல்லவேண்டாம் என்று நாம் மக்களை கட்டாயப்படுத்தவில்லை. எனினும் செல்லாமலிருப்பது பாதுகாப்பானது என்றே வலியுறுத்துகின்றோம். காரணம் மலை ஏறும் போது முகக்கவசம் அணிந்து கொண்டு ஏறுவது சிரமமானதாகும். எனினும் நாட்டில் தற்போதுள்ள கொவிட் பரவல் தீவிர நிலைமையில் முகக்கவசம் அணியாமல் வெளியிடங்களில் நடமாடுவது பாதுகாப்பற்றது. எனவே இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான போக்குவரத்துக்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறு மக்களை கேட்டுக்கொள்கின்றோம். கொவிட் தொற்றுறுதி செய்யப்பட்டு உயிரிழப்பவர்களைத் தகனம் செய்யும் தீர்மானத்திலேயே சுகாதார அமைச்சு உள்ளது. விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு அந்த குழுவின் பரிந்துரைக்கமையவே கடந்த மார்ச் மாதம் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. எனினும் மீண்டும் இது தொடர்பில் ஆராய்வதற்காக வைரஸ் தொடர்பான விசேட நிபுணர்கள் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவின் அறிக்கையையே நாம் எதிர்பார்த்துள்ளோம். அந்த அறிக்கை கிடைத்த வுடன் அதனை நாட்டு மக்களுக்கு அறியத்தருவோம். - என்றார்.

# 28 கழிவு அடங்கிய கொள்கலன்கள் மீண்டும் உக்ரேனிற்கு அனுப்பப்படும்

## அமைச்சர் மஹிந்த தகவல்



உக்ரேனிலிருந்து கொண்டு வரப்பட்ட 28 விவசாயக் கழிவுகள் அடங்கிய கொள்கலன்களை மீள ஏற்றுமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என சுற்றுச்சூழல் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், விவசாய கழிவுகள் அடங்கிய கொள்கலன்கள் தொடர்பாக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனக் கூறினார்.

மேலும் இந்த விடயத்தில் தவறு செய்தவர்கள் கடுமையான சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளை இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாமல் இருக்க சரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### சுகாதார நடைமுறையை மீறிய .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை போக்குவரத்துச் சபை சுகாதார நடைமுறை - விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்கின்றது. எனினும், தனியார் துறையினரில் 90 சதவீதமானோர் மாத்திரமே இந்த நடைமுறையை பின்பற்றுகின்றனர்.

இந்தநிலையில், விதிமுறைகளைப் பின்பற்றாத 50 இற்கும் மேற்பட்ட தனியார் பஸ்களின் அனுமதிப் பத்திரங்களைத் தற்காலிகமாக இரத்துச் செய்துள்ளோம். என்றோ ஒருநாள் கொரோனாத் தொற்று இலங்கையை விட்டு நீங்கிய பின்னர்தான் அந்த பஸ்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் மீண்டும் வழங்கப்படும் - என்றார்.

### டக்ளஸைக் கட்டிப்பிடித்துக்கொண்டு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மணிவண்ணனை ஆதரித்ததன் மூலம் கட்சியின் கொள்கைக்குத் துரோகம் இழைத்து, யாழ்ப்பணம் மாநகர சபையின் எமது கட்சியைப் பிரதிநித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் 10 பேர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கைகோர்த்து கட்டிப்பிடித்துக் கொண்டுள்ளனர். அவர்களை எமது கட்சியிலிருந்து நீக்குவோம். இந்த நிலைப்பாட்டில் நாம் மிகவும் உறுதியாக இருக்கின்றோம் - என்றார்.

### 'மொட்டு' கட்சியின் உறுப்பினர்கள்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் எவ்வித பிரச்சினையும் கிடையாது. ஆனால், எமது கொள்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மட்டுமல்ல ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்கள் சிலரும் விரைவில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணையவுள்ளனர் - என்றார்.

# இந்தியாவுடன் பேசாமல் மாகாண சபைகள் முறைமை தொடர்பில் முடிவெடுக்காதீர்கள்!

## அரசுக்கு மைத்திரி அணி எச்சரிக்கை

இலங்கையில் மாகாண சபைகள் முறைமை குறித்து எந்தவொரு முடிவையும் எடுப்பதற்கு முன்னர், இந்தியாவுடன் அரசு கலந்துரையாட வேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் பத்திக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் முறையில் மாற்றங்களை ஏற்படுத்துவது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாகாண சபைகள் முறைமை தொடர்பில் இலங்கை தனியாக எந்தவொரு முடிவையும் எடுக்க முடியாது. மாகாண சபைகள் முறைமையை வெற்றிகரமாகச் செயற்படுத்துவது குறித்து இந்தியாவுடன் கலந்துரையாடப்பட வேண்டும்.

இந்தியாவுடன் கலந்துரையாடாமல் தீர்மானத்துக்கு வருவது பிரச்சினைகளை ஏற்படுத்திவிடக் கூடும்.

மாகாண சபைத் தேர்தல் முறைமையில் சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியம். புதிய தேர்தல் முறைமையின் கீழ் மாகாண சபைத் தேர்



தலை நடத்துவதே சாத்தியமானதாக அமையும் - என்றார்.




# மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

**நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள் யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.**

**விலை - 150/=**







**கற்பகவனம் விற்பனை நிலையம்.**
**461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**
**(யாழ் முற்றம் - Yarl Muttam)**
**021 492 7778**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.12.2020 இல் வெளியிடப்பெற்றது.